செ.வெ.எண்: 26 நாள்: 13.10.2020

# பத்திரிக்கை செய்தி

**கரூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த நிறுவனங்கள் /சிறந்த பணியாளர்களுக்கு தமிழக அரசு விருதுகளுக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணிபுரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு கீழ்காணும் தமிழக அரசின் மாநில விருதுகள் டிசம்பர் 3 ஆம் நாள் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று சென்னையில் 10 கிராம் எடையுள்ள தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

சிறந்த பணியாளர் மற்றும் சுயத்தொழில் புரிபவர் பிரிவில் 1.கை,கால் பாதிக்கப்பட்டோர் தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் 2. பார்வை திறன் பாதிக்கப்பட்டோர், 3 செவித்திறன் பாதிக்கப்பட்டோர், 4. மனவளர்ச்சி குன்றியோர், 5. பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடுடையோர் 6.புறவுலுக சிற்தனையற்றோர் குறிப்பிட்ட கற்றலில் குறைபாடுடையோர் 7. மன நோய் 8. இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு இரத்த அழிவுச்சோகை அரிவாளனு இரத்த சோகை ,9. நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு பண்முக கடினமாதல் நடுக்கு வாதம் மற்றும் 10 பல்வகை குறைபாடுடையோருக்கும்

சிறந்த ஆசிரியர் விருதுக்கான பிரிவில் (பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோரருக்கு கற்பித்தல் செவித்திறன் பாதிக்கப்பட்டோரருக்கு கற்பித்தல் மற்றும் மனவளர்ச்சி குற்னியோருக்கு கற்பித்தல்) ஆரம்ப நிலை பயிற்ச்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (செவித்திறன் குறைபாடுடையோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் )

மேலும் சிறந்த சமூக பணியாளர், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் , மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளது.

எனவே மேற்கண்ட வருதுகள் பெற தகுதியுடைய நபர்கள் விண்ணப்பங்களை www.scd.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களை நேரில் பெற்று கொள்ளலாம், மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரும் 16.10.2020 -க்குள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**